# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

## OS.No.41/2021

2021-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10-ம் நாள் புதன்கிழமை **வா.சா.1**-ன் வாக்கு மூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) கிரேடு 2 பெஞ்ச் க்ளார்க் திருமதி.ம.கற்பகம் என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | மனோகரன் | **வட்டம்** | திருப்பத்துார் |
| **த.பெ** | ராமநாதன் | **சமயம்** | இந்து |
| **கிராமம்** | சிங்கம்புணரி | **வயது** | 62 |

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கின் வாதி. எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்களை நான் தான் வழக்கறிஞரிடம் சொன்னேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 03.05.2018-ம் தேதியன்று பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த ரூ.10,00,000/-த்திற்கான புரோநோட் அசல் வா.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.12.2019-ம் தேதியன்று நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.2-ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது அசல் வா.சா.ஆ.3-ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதி அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல் வா.சா.ஆ.4-ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.